## கல்லூரிக் கல்வித்துறை

அனுப்புநர்:
முனைவர்.திருமதி.ஜெ.மஞ்சுளா.,
எம்.எஸ்சி., பி.எட்., எம்.ஃபில்., பி.எட்.,
கல்லூரிக் கல்வி இயக்குநர்,
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
சென்னை–600 006.

பெறுநர்:
அனைத்து கல்லூரி முதல்வர்கள்,
அரசு கலை அறிவியல் மற்றும்
கல்வியியல் கல்லூரிகள்.

ந.க.எண்.68010/டி3/2014, நாள்: 16.05.2018

அய்யா/அம்மையீர்,

பொருள்: தமிழ்நாடு கல்லூரி கல்வித்துறை – மறு பணி நியமனம் (Re-Employment) – ஒய்வூதிய திட்டத்தின் கீழ் வராத ஆசிரியர்கள் – மறு நியமன ஊதியம் வழங்குதல் – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (நிலை) எண்.243, உயர்கல்வித் (எப்1) துறை, நாள்:23.08.2017.

------

பார்வையில் காணும் அரசாணையின் நகல் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைகாகவும் இணைத்தனுப்பப்படுகிறது.

ஜெ.மஞ்சுளா 16/5/18
கல்லூரிக் கல்வி இயக்குநர்

16/5/18

இணைப்பு: மேற்படி

193/30/8 034280

கல்லூரிக் கல்வி இயக்குனர் அலுவலகம் 28 AUG 2017 சென்னை-600 006

கருக்கம்

தமிழ்நாடு கல்லூரிக் கல்விப் பணி – கல்வியாண்டின் இடையில் வயது முதிர்வில் ஓய்வு பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு அந்த கல்வியாண்டின் இறுதி வரையில் மறு பணிநியமனம் (Re-employment) – ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வராத ஆசிரியர்களுக்கு அவர்கள் ஓய்வு பெறுவதற்கு முன்னர் கடைசியாக பெற்ற ஊதியத்தை மறுபணிநியமன காலத்திற்கான ஊதியமாக வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (எப்1) துறை

அரசாணை (நிலை) எண்.243

நாள் 23.08.2017
ஹேவிளம்பி, ஆவணி–7
திருவள்ளுவர் ஆண்டு–2048

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.170, பள்ளிக் கல்வித் துறை, நாள் 23.10.2014.
2. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.068010/டி3/2014, நாள் 12.03.2015.

******

ஆணை:–

தமிழ்நாடு கல்லூரிக் கல்வித் துறையில், பணிபுரியும் ஆசிரியர்கள் வயது முதிர்வின் காரணமாக கல்வியாண்டின் இடையில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதனால் மாணவர்களின் கல்வி நலன் எவ்விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்பதைத் கருத்திற்கொண்டு அரசு அவ்வாசிரியர்களுக்கு அக்கல்வியாண்டின் இறுதி வரை பணிபுரிய ஏதுவாக மறு நியமன அனுமதி வழங்கி வருகிறது. இந்நடைமுறை தற்போதும் கல்லூரி ஆசிரியர்களுக்கு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் பணிபுரியும் புதிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வரும் ஆசிரியர்களின் ஓய்வூதிய கருத்துருவினை மாநில கணக்காயருக்கு அனுப்புவதிலிருந்து தவிர்ப்பு வழங்கப்பட்டு, அவ்வாசிரியர்களுக்கு மறுநியமனம் அளிக்கும்போது ஓய்வு பெறுவதற்கு முன்னர் கடைசியாக பெற்ற ஊதியமே (Pay last drawn at the time of retirement) மறுபணிநியமன காலத்திற்கான ஊதியமாக வழங்கி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், 2003–ஆம் ஆண்டு முதல் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதால், அதற்கு பின் பணியில் சேர்ந்த ஆசிரியர்கள் ஓய்வூதியம் பெற தகுதியில்லை எனவும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வரும் கல்லூரி ஆசிரியர்களுக்கு மறுநியமன கால ஊதியம் கணக்கிடு செய்ய இயலவில்லை எனவும், அவர்களுக்கு மறுநியமன ஊதியம் வழங்குவது குறித்து அரசாணைகள் ஏதும் பெறப்படவில்லை எனவும் தெரிவித்து, பள்ளிக் கல்வித் துறையில் மறுநியமன காலத்தில்

ஆசிரியர்களுக்கு ஒய்வு பெறுவதற்கு முன்பு கடைசியாக பெற்ற ஊதியமே மறுநியமன கால ஊதியமாக வழங்குவது போன்று, கல்லூரிக் கல்வித் துறையிலும் மறுபணி நியமன காலத்தில் பணிபுரியும் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஒய்வூதியக் கருத்துருக்களை மாநில கணக்காயருக்கு அனுப்புவதிலிருந்து விலக்களித்தும் இவ்வாசிரியர்களுக்கு ஒய்வு பெறுவதற்கு முன்பு கடைசியாக பெற்ற ஊதியமே மறுபணி நியமன ஊதியமாக பெற்று வழங்குவதற்கு ஆணைகள் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

4. மேலே பத்தி 3-ல் படிக்கப்பட்ட கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில், மறுபணி நியமன காலத்தில் பணிபுரியும் பங்களிப்பு ஒய்வூதிய திட்டத்தின் கீழ் வரும் ஆசிரியர்களின் ஒய்வூதிய கருத்துருக்களை மாநில கணக்காயருக்கு அனுப்புவதிலிருந்து விலக்களித்தும், கல்வியாண்டின் இடையில் வயது முதிர்வில் ஒய்வு பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு அந்த கல்வியாண்டின் இறுதி வரையில் செய்யப்படும் மறு நியமனத்திற்கு அவர்கள் ஒய்வு பெறுவதற்கு முன்பு கடைசியாக பெற்ற ஊதியத்தினையே மறுநியமன ஊதியமாக பெற்று வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. மேலும், கல்வியாண்டின் இடையில் ஒய்வு பெற்று மறுநியமனம் செய்யப்படும் ஆசிரியர்களுக்கான மறுநியமன ஆணை வெளியிடும் போது பின்வரும் நிபந்தனைகளையும் சேர்த்து ஆணைகள் வெளியிடப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது:-

i. கல்வியாண்டின் இடையில் ஒய்வு பெற்று மறு நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள், அவர்கள் வயது முதிர்வு காரணமாக ஒய்வு பெறும் நாளன்று ஒய்வு பெற அனுமதித்து தனியே ஒரு ஆணை தகுதியுடைய அதிகார அளவில் (Competent Authority) வெளியிடப்பட வேண்டும்,

ii. ஒய்வு பெற்ற நாளுக்கு மறு நாள் முதல் கல்வியாண்டு முடியும் வரை மறுபணி நியமனம் செய்து மற்றொரு ஆணை வெளியிடப்பட வேண்டும்,

iii. மறுபணி நியமன காலத்திற்கான ஊதியம் வழங்கும் போது அதில் பங்களிப்பு ஒய்வூதிய திட்ட சந்தாத் தொகையை பிடித்தம் செய்தல் கூடாது.

5. மேலே பத்தி 4-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளை நடைமுறைகளை நடைமுறைப்படுத்துமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு எண். 40247/நிதி(கல்வி-1)/2017 நாள் 18.08.2017ல் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனில் பாலிவால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர் சென்னை-6
மாநில கணக்காயர் சென்னை-18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை / மதுரை

கருவூல அலுவலர் / சார் கருவூல அலுவலர்
நகல்
நிதித்(கல்வி–1) ஒ.கு.தி) துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் அவர்களின் தனிச் செயலர், உயர்கல்வித் துறை , சென்னை–9.
உயர்கல்வி (இ) துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி கோப்பு

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

28/8/2017
பிரிவு அலுவலர்
28/8/2017